


**ISSN Print:** 2394-7500
**ISSN Online:** 2394-5869
**Impact Factor:** 5.2
IJAR 2017; 3(7): 706-709
www.allresearchjournal.com
Received: 03-05-2017
Accepted: 13-06-2017

**Dr. D Jayanthi**
Assistant Professor
Department of Tamil Faculty of Science And Humanities, SRM University, Kattankulathur - 603 203 Kanchipuram, Chennai, Tamil Nadu, India

**Correspondence**
**Dr. D Jayanthi**
Assistant Professor
Department of Tamil Faculty of Science And Humanities, SRM University, Kattankulathur - 603 203 Kanchipuram, Chennai, Tamil Nadu, India

# உலகத் தோற்றக் கொள்கை (இலக்கண இலக்கியங்களின் வழி)

**Dr. D Jayanthi**

## 1. Introduction

**பஞ்ச பூதங்கள்**

இந்த உலகம் ஐம்பெரும் பூதங்கள் கலந்த மயக்கம் அவை நிலம், நீர், தீ' காற்று, ஆகாயம் ஆகியவற்றின் சேர்க்கையால் ஆனது என்பது அறிவியல் உண்மை. இவ்வுண்மையைத் தொல்காப்பியர் 2000 ஆண்டுகளுக்கு முன்னரே தம் நூற்பாவில்

நிலம் தீ நீர் வளி விசும்போ டைந்தும்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயல்நெறி வழா அமைத்
திரிவுஇல் சொல்லொடு தழாஅல் வேண்டும்" (தொல் . 1589)

இவ்வுலகம் என்பது நிலம் , தீ, நீர், வளி(காற்று) , விசும்பு (ஆகாயம்) ஆகிய ஐம்பெரும்பூதங்கள் கலந்த கலப்பால் ஆகியது. இவ்வுலகமும் உலகப் பொருட்களும் இவ்வைந்து பூதங்களால் உருவானவை என்று தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள கருத்தானது இன்றைய அறிவியலாளர்களின் கொள்கைகளோடு ஒத்துள்ளதை இதனால் அறியமுடிகின்றது.

தொல்காப்பியர் இலக்கணத்திற்குரிய வரையறைகளைக் கூறுவதோடு மட்டுமல்லாமல் அறிவியல் சார்ந்த கூறுகளையும் தெளிவாகவும் அழகாகவும்கூறியுள்ளார். இன்றைய அறிவியல் வளர்ச்சிக்கு இலக்கிய நூல்கள் அடித்தளமாக அமைந்திருப்பதைப் போல இலக்கியத்திற்கு முற்பட்ட இலக்கண நூலான தொல்காப்பியமும் அடித்தளமாக விளங்குகிறது.

எந்த இடத்தில் பூதங்கள் அனைத்தும் இல்லையோ, அந்த இடத்தில் உயிரினங்களும் அவற்றின் பிறப்பும் இல்லை என்ற கருத்து உறுதிப்படுவதற்கும் பூதங்கள் எல்லாம் ஒரேஅளவில் இருந்தால், அங்கும்பிறப்பில்லை.அவை, பங்குபெரும்அளவுமாறினால்உயிர்உண்டாகும்என்பர். (ஔவைக்குறள் – செய்.2).இது, உயிரிங்கள்தோன்றியதற்கானஅடிப்படையைஅறிவிக்கிறது.

தொல்காப்பியர் காலத்திலேயே தமிழரிடையே சரியான வானியல் அறிவு இருந்தது என்பதை கீழ்க்காணும் தொல்காப்பிய நூற்பாக்களின்வழி அறிந்துகொள்ளலாம்.

”ஞாயிறு திங்கள் சொல் என வரூஉம்”.....(தொல் 541)

“மழையென் கிளவி வளியியல் நிலையும்” (தொல் 287)

“வெயிலென் கிளவி மழையியல் நிலையும்” (தொல் 377)

“வளியென வரூஉம் பூதக்கிளவியும்
அவ்வியல் நிலையல் செல்வி தென்ப “ (தொல் 242)

காலத்தால் மூத்த இலக்கிய, இலக்கண நூலான தொல்காப்பியத்தில் அறிவியல் சார்ந்த செய்திகளைப் புகுத்திய பெருமை தொல்காப்பியனாரைச் சாரும். இவரைத் தொடர்ந்து பின்னெழுந்த சங்க இலக்கிய நூல்களிலும் அறிவியற் செய்திகள் பரந்து செறிந்துள்ளதையும் கீழ்க்கண்ட சான்றுகளின் வழி அறியலாம்.

**புறநானூறு**

இந்நிலவுலகம் எவ்வாறு உருவானது என்பது ஆதாரபூர்வமாக அறிவியல் அறிஞர்கள் நிரூபித்துள்ளனர். ஆனால் அதே செய்தியை 2000 ஆண்டுகளுக்கு முன்பே கண்டறிந்து பாடல் வரிகளாக உலகுக்கு வழங்கிச் சென்றவர்கள் சங்க காலத் தமிழ்ப்புலவர்கள் ஆவர்.

எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான புறநானூற்றில் ஐம்பெரும் பூதங்களான நிலனையும், வானையும், காற்றையும், நெருப்பையும், நீரையும், உலகம் கொண்டுள்ளது என்று சங்ககாலப் புலவர் முரஞ்சியூர் முடிநாகராயர் ஓர் அறிவியற் பாடலைப் பாடியுள்ளார்.

'மண் திணிந்த நிலனும்,
நிலம் ஏந்திய விசும்பும்,
விசும்பு தைவரு வளியும்,
வளித் தலைஇய தீயும்,
தீ முரணிய நீரும், என்றாங்கு
ஐம்பெரும் பூதத்து இயற்கை போலப்.....' (புறம். 2: 1-6)

இதில் மண் செறிந்த நிலமும், நிலத்திலிருந்து ஆகாயமும், ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து நெருப்பும், நெருப்பிலிருந்த நீரும் உண்டாயின என்ற அறிவியல் பேசப்படுவதையும் காண்கின்றோம்.

சங்க காலப் புலவரான உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்பவர் கீழ்க் காணும் புறநானூற்றுப் பாடலில் 'செஞ்ஞாயிற்றின் வீதியும், அஞ்ஞாயிற்றின் இயக்கமும், இயக்கத்தால் சூழப்படும் மண்டிலமும், காற்றுச் செல்லும் திசையும், ஆதாரமின்றி நிற்கும் வானமும், என்றிவற்றைத் தாமே அவ்விடம் சென்று அளந்து அறிந்தவரைப் போல, அவை இப்படிப்பட்டவை என உரைக்கும் அறிவுடையோரும் உளர்' என்று விண்ணியல் விஞ்ஞானம் குறித்து விளக்கி இருப்பதை கீழ்க்காணும் புறநானூற்றுப் பாடலின் வழி அறியலாம்.

'செஞ்ஞா யிற்றுச் செலவும்,
அஞ்ஞா யிற்றுப் பரிப்பும்,
பரிப்புச் சூழ்ந்த மண் டிலமும்,
வளி திரிதரு திசையும்,
வறிது நிலைஇய காயமும், என்றிவை
சென்றளந்து அறிந்தார் போல, என்றும்
இனைத்து என்போரும் உளரே....' - (புறம். 30: 1-7)

**பதிற்றுப்பத்து**

எட்டுத்தொகை நூல்களில் புறநூல்களில் ஒன்றான பதிற்றுப்பத்தில் அறிவியல் பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன.

நிலம், நீர், வளி, விசும்பு, என்ற நான்கின்
அளப்பு அரியையே;
நாள், கோள், திங்கள், ஞாயிறு, கனை அழல்
ஐந்து ஒருங்கு புணர்ந்த விளக்கத்து அனையை; ....'- (14: 1-4)

நிலம், நீர், காற்று (வளி), வானம் (விசும்பு) ஆகிய நான்கினதும், விண்மீன்கள் (நாள்), கிரகங்கள் (கோள்), சந்திரன் (திங்கள்), சூரியன் (ஞாயிறு), பெருநெருப்பு (கனை அழல்) ஆகிய ஐந்தினதும் அளப்பரிய பேராற்றல்களைச் சங்கப் புலவர் குமட்டூர்க் கண்ணனார் இரண்டாம் பத்தில் தந்துள்ளார்.

அடுத்து மூன்றாம் பத்தில் சங்கப் புலவரான பாலைக் கௌதமனார் பாடலில் நீண்ட தொலைவிலுள்ள வானத்திலிருந்து ஒளிவிடும் மின்னல் வெளிச்சம் விண்ணிலும் மண்ணிலும் பரவி நிற்பதாகவும், நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம் என்னும்

ஐம்பூதங்களின் ஆற்றல் பற்றியும், ஒளி வீசிக் கொண்டு வானில் கதிரவன் சுடர்பரப்ப, அதற்குச் சற்று வடக்கேயுள்ள சிறப்புமிகு வெள்ளிக்கோள் என்னும் சுக்கிரன், பலன் தரும் மற்றக் கோள்நிலைகளும் பொருந்தி நிற்கையில் நல்ல மழை பொழியும் என்று கூறியுள்ளார்.

நெடு வயின் ஒளிறு மின்னுப் பரந்தாங்கு
.........................................................
நீர், நிலம், தீ, வளி, விசும்போடு, ஐந்தும்
.......................................
வயங்கு கதிர் விரிந்து வானகம் சுடர்வர,
வறிது வடக்கு இறைஞ்சிய சீர் சால் வெள்ளி
பயம் கெழு பொழுதோடு ஆநியம் நிற்ப,
கலிழும் கருவியொடு கை உற வணங்கி....' – (24: 1, 15, 23-26)

வெள்ளிக் கோள் வடக்கே தோன்றினால் நல்ல மழை பொழியும் என்பது ஒரு வழக்காகும். வானம், மின்னல், வெளிச்சம், விண், மண், நீர், நிலம், நெருப்பு, காற்று, ஆகாயம், கதிரவன், சுக்கிரன், மழை ஆகிய இயற்கை வளங்களைத் தொட்டுச் செல்லும் புலவர் ஆகாயத்தில் பறந்து திரியும் ஒர் அற்புதக் காட்சியை நம் முன் வைத்துச் சென்றுள்ளார்.

**பரிபாடல்**

கடைச் சங்கத்தில் எழுந்த எட்டுத்தொகை நூல்களில் ஒன்றான பரிபாடலில் அறிவியல் பேசும் பாங்கினை நல்லெழுநியார் என்னும் புலவர் யாத்த ஒரு பாடலில் காண்போம்.'சுவைமை, இசைமை, தோற்றம், நாற்றம், ஊறு என்று உரைக்கப்படும் ஐந்தான அவையும் நீயே யாவாய்! இசைமை எனப்படும் முதலான ஓசையால் அறியப்படும் வானமும் நீயே! ஓசை, ஊறு என்னும் இரண்டானும் அறியப்படும் காற்றும் நீயே! ஓசை, ஊறு, ஒளி என்னும் மூன்றானும் உணரப்படும் தீயும் நீயே! ஓசை, ஊறு, ஒளி, சுவை என்னும் நான்கானும் உணரப்படும் நீரும் நீயே! ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்னும் ஐந்தானும் முற்ற உணரப்படும் நிலனும் நீயே! என்று திருமாலைப் போற்றுகின்றார்.

சுவைமை இசைமை தோற்றம் நாற்றம் ஊறு
...................................................
ஒன்றனிற் போற்றிய விசும்பும் நீயே!
இரண்டி னுணரும் வளியும் நீயே!
மூன்றி னுணரும் தீயும் நீயே!
நான்கி னுணரும் நீரும் நீயே!
ஐந்துடன் முற்றிய நிலனும் நீயே!.......' – (பாடல் 13: 14, 18-22)

விசும்பும், வளியும், தீயும், நீரும், நிலமும் ஆகிய இயற்கையான ஐம்பொறிகளும் இங்கேயும் பேசப்படுகின்றன. மேலும் இரண்டாம் பாடலில்

செந்தீச் சுடரிய ஊழியும் – தண்பெயல்
தழீஇய ஊழியும்” (பரி 2)

என்று ஒன்றரை வரிகளில் உலகம் தோன்றிய வரலாற்றினை உணர்த்தியுள்ளார் ஆசிரியர். இந்நிலவுலகமானது சூரியனிலிருந்து தெளிந்து விழுந்த ஒரு மாபெரும் தீப்பிழம்பு .இத்தீப்பிழம்பு ஒரு ஊழிக்காலம் நெருப்புக்கோலமாகவே சுற்றி சுழன்று கொண்டிருந்தது.அதன் பின் வெப்பம் தணிந்து பூமியின் மேல்பரப்பின் மீது பனிப் படலங்கள் உறைய ஒரு ஊழிக்காலம் பிடித்தது.அதன்பின் பனி உருகி நீராக மேடான தரைப்பகுதி தலைத்தூக்க ஒரு ஊழிக்காலம் ஆனது.அதன்பிறகு தான் இன்று நாம் காணும் இந்நிலவுலகம் பல்வேறு உயிரினங்களைப் பெற்று முழுவடிவினைப்பெற்றது. என்ற இப்பாடலின் பொருளின் மூலம் மாபெரும் பூகோள வியல் அறிவியல் வளர்ச்சி வரலாற்றை முழுமையாக விளக்க சங்க த்தமிழன் இரண்டு வரிகள் கூட இல்லாமல் ஒன்றரை வரிகளில் சொல்லி உள்ளதைக் காணும் போது அவர்கள் நுட்பமான அறிவியல் சார்ந்த கருத்துக்களை அறிந்துள்ளனர் என்பதை அறிய முடிகின்றது.

**ஐங்குறுநூறு**

இந்நூலின் பின்வரும் கடவுள் வாழ்த்தைப் பாரதம் பாடிய பெருந்தேவனார் எனும் கடைச் சங்கப் புலவர் பாடியுள்ளார்.

'நீலமேனி வாலிழை பாகத்து
ஒருவன் இருதாள் நிழல்கீழ்
மூவகை உலகும் முகிழ்த்தன, முறையே.'

நீலநிற மேனியையும் தூய அணிகளையும் உடைய உமையவளைத் தன் உடலில் ஒரு பாகமாய்க் கொண்ட ஒப்பில்லாத சிவபெருமானின் இரண்டு திருவடிக் கீழ் மூன்று வகைப்பட்ட உலகங்களும் நிலை பெற்றுள்ளன. மூவகையுலகு என்பது மேல், நடு, கீழ் என்பனவாம்.அவைதான் விண், மண், பாதலம் ஆகும்.பரம்பொருளிலிருந்து வானம் தோன்றியது, வானத்திலிருந்து காற்றுத் தோன்றியது.காற்றிலிருந்து தீ தோன்றியது.தீயிலிருந்து நீர் தோன்றியது. நீரிலிருந்து நிலம் தோன்றியது என்று ஐம்பூதங்களின் தோற்றம் குறித்துக் கூறப்பட்டுள்ளது.

**சிலப்பதிகாரம்**

சங்கம் மருவிய காலத்தில் எழுந்த ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் 'திங்களைப் போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்! மாமழை போற்றுதும்!' என்று பரந்த வானியல் பேசப்படுவதையும் காண்கின்றோம். இங்கே இயற்கையான சந்திரனையும், சூரியனையும், மாமழையையும் ஒரே நேரத்தில் ஏற்றிப் போற்றும் இலக்கிய மேதை இளங்கோவடிகள் விண்வெளி பேசும் விஞ்ஞானியாய் விண்ணில் பறந்து திரிவதையும் உற்று நோக்கிப் பார்க்கின் தெளிவாகும்.

**திருவாசகம்**

”நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த”
(திருவாசகம் வ. 49)

மாணிக்கவாசகர் தம் திருவாசகத்தில் இறைவன் ஐம்பூதங்களிலும் நிறைந்திருக்கிறான் என்றும் ஐந்து பூதங்களுக்கும் ஐந்து நிறங்கள் உண்டு என்றும் மண்ணுக்குப் பொன்மையும், நீருக்கு வெண்மையும், நெருப்புக்குச் செம்மையும், காற்றுக்குக் கருமையும், வானுக்குப் புகையையும் சாத்திரம் கூறும்.

"பொன்பார் புனல் வெண்மை பொங்கும் அனல் சிவப்பு
வன்கால் கருமைவளர் வான்தூமம்"
(உண்மை விளக்கம் வெண்பா -5)

என்பது உண்மை விளக்கம். இந்த ஐந்து நிறங்களையுடைய ஐந்து பூதங்களிலும் இறைவன் இரண்டறக் கலந்திருத்தலால், "நிறங்கள் ஓர் ஐந்துடையாய்" என்றார்.இனி, படைத்தல் முதலாக ஐந்து தொழில்கள் புரிவதற்கு ஐந்து வடிவங்கள் கொண்டிருக்கின்றான் என்றாலும் ஒன்று.ஐந்து வடிவங்களாவன, பிரமன், விட்டுணு, உருத்திரன், மகேசுவரன், சதாசிவன் என்னும் வடிவங்கள்.

தொல்காப்பியத்தில் நிலம், ஆகாயம், தீ, நீர், காற்று ஆகிய ஐம்பூதங்கள் பற்றியும், தாவரத்தின் உயிர், உணர்வு பற்றியும், மற்றைய உயிரினங்களின் அறிவு, உயிர், உணர்வு பற்றியும், ஓரறிவிலிருந்து ஆறறிவுள்ள உயிரினங்களின் பெயர்ப்பட்டியல் பற்றியும், புறநானூற்றில் நிலனையும், வானையும், காற்றையும், நெருப்பையும், நீரையும் உலகம் கொண்டுள்ளது பற்றியும், பதிற்றுப்பத்தில் விண்மீன்கள், கிரகங்கள், சந்திரன், ஞாயிறு, நெருப்பு மின்னல், வெள்ளிக்கோள் ஆகியவற்றின் ஆற்றல் பற்றியும், பரிபாடலில் சுவைமை, இசைமை, தோற்றம், நாற்றம், ஊறு என்பன பற்றியும், ஐங்குறுநூற்றில் விண், மண், பாதலம் ஆகிய மூவுலகு பற்றியும், சிலப்பதிகாரத்தில் சந்திரன், சூரியன், மாமழை என்று பரந்த வானியல் பற்றியும் இலக்கியங்களின் வழி அறிந்துகொள்வதன்மூலம் நம் முன்னோர்களின் அறிவியல் சார்ந்த கருத்துக்கள் இன்றைய அறிவியல் கருத்துக்களுடன் ஒத்துள்ளதை அறிந்து கொள்ள முடிகின்றது.